முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.6.2025) சென்னை மாநகரில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 6.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 50 கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கிவைக்கும் விதமாக, சென்னை, மெரினா கடற்கரை நீச்சல் குளம் அருகில் அமைக்கப்பட்டுள்ள கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரத்தை தொடங்கி வைத்து, குடிநீரை அருந்தினார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 17.6.2025 அன்று சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் பேரூராட்சி செம்மொழி பூங்காவில், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 7.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றிலும் தடுப்பு வலையுடன் அமைக்கப்பட்டுள்ள மின் னொளி விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்து, மகளிர் கைப்பந்து போட்டியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், பேரூராட்சித் தலைவர் திருமதி என்.கோகிலாராணி உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

நீலகிரி மாவட்டம் – கோத்தகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில்

தென்மேற்கு பருவமழைக் குறித்த ஆய்வுக் கூட்டம்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பங்கேற்பு!

சென்னை, ஜூன். 19- நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில், தென்மேற்கு பருவமழை குறித்த ஆய்வுக் கூட்டம் 17.06.2025 அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன் தெரிவித்த தாவது:-

தென்மேற்கு பருவமழையை முன்னிட்டு, நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. அனைத்துத்துறை அலுவலர்களும் அனைத்து முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்புப் பணிகளை மிக சிறப்பாக மேற்கொண்டமைக்காக முதலாவதாக எனது பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறேன். மழை மற்றும் காற்றின் காரணமாக சில இடங்களில் மின்கம்பங்களில் மரங்கள் விழுந்து போக்குவரத்து மற்றும் மின்சாரம் துண்டிக்கப் பட்டது. சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் மூலம் போக்குவரத்தை உடனடியாக சீர் செய்து, பொதுமக்களுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாத வகையில் நடவடிக்கை மேற்கொண்ட மாவட்ட நிர்வாகத்திற்கு பாராட்ட கடமைப்பட்டுள்ளேன். சில இடங்களில் மின் விநியோக பணிகள் நடைபெற்று வருகிறது. இதனை விரைவாக முடித்து மின் விநியோகம் வழங்க வேண்டும். ஒவ்வொரு துறையின் வாயிலாக, மழையை முன்னிட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பிரேரணைகள் அனைத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் அரசு தலைமைச்செயலாளர் அவர்கள் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்று, அதற்கான தொகையினை பெற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், வருங்காலங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதால் அனைத்து துறை அலுவலர்களும் விழிப்புடனும், முழு ஈடுபாட்டுடனும் பணியாற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

இந்திய வானிலை ஆய்வு மையம், நீலகிரி மாவட்டத்திற்கு 14.06.2025 மற்றும் 15.06.2025 ஆகிய இரண்டு நாட்களில் கன முதல் மிக கனமழை பெய்ய உள்ளதாக ரெட் அலர்ட் விடுக்கப்பட்டிருந்த நிலையில், கூடலூர், குந்தா, பந்தலூர் பகுதிகளில் சுமாரான மழை பெய்துள்ளது. கடந்த ஆண்டை விட 25 சதவீதம் அவலாஞ்சி பகுதியில் மட்டும் கூடுதலாக மழை பெய்துள்ளது. கடந்த 15 நாட்களுக்கு முன்பு ரெட் அலர்ட் விடுக்கப்பட்டிருந்த போது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும் வகையில் மிக வேகமான காற்றோடு அதிக மழை பொழிவு இருந்தது. இந்த முறை மழை பெய்துள்ளது. ஆனால் காற்றின் வேகம் குறைவாக காணப்பட்டது. இதனால் பெரிய அளவில் சாலை, போக்குவரத்து, அதிகம் பாதிப்பு இல்லை. சாலைகளில் விழும் மரங்களை உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட்டது. மழையினால் 8 வீடுகள் பகுதி சேதமும், 2 வீடுகள் அதிக அளவில் பாதிப்படைந்துள்ளது. 2 இடங்களில் மண்சரிவும், 24 மின் கம்பங்கள் சேதமடைந்துள்ளது. இதனால்; குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. அதனை மின் ஊழியர்கள் தொடர்ந்து சரி செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். விரைவில் இதனை சீர் செய்ய தேவையான அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என். எஸ். நிஷா கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா, உதகை நகர்மன்ற துணைத் தலைவர் ரவிக்குமார், குன்னூர் நகர்மன்ற துணைத்தலைவர் வாசிம்ராஜா, நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர்கள்; குழந்தைராஜ் (மாநில நெடுஞ்சாலை), செல்வம் (தேசிய நெடுஞ்சாலை), கோத்தகிரி நகராட்சி ஆணையர் மோகன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், திட்ட குழு உறுப்பினர் ராமசாமி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சரவணகுமார், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) கணேஷ், வட்டாட்சியர்கள் (கோத்தகிரி) திருமதி ராஜலட்சுமி, தினேஷ்குமார் (பேரிடர் மேலாண்மைத்துறை), கோத்தகிரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி அனிதா, பிரேம்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, புதிய விரிவான சிற்றுந்து திட்டத்தை, திண்டுக்கல் காமராஜர் பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் (17.06.2025) கொடியசைத்து தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சச்சிதானந்தம், கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி செ.ஜோதிமணி, பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ் மற்றும் பலர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.6.2025) தலைமைச் செயலகத்தில், நிதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் நாணயவியல் ஆராய்ச்சியாளர் ஆறுமுக சீதாராமன் ஆகியோர் இணைந்து எழுதிய "ரலாறு கூறும் தமிழ்நாட்டுக் காசுகள்" எனும் 2 பாகங்கள் கொண்ட புத்தகங்களை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர். பாலகிருஷ்ணன் (ஓய்வு) ஆகியோர் உடனிருந்தனர்.

பெண்களுக்குப் பயத்தை உண்டாக்கி அவர்களை வீட்டுக்குள்ளேயே முடக்கும்

பா.ஜ.க.வின் கொள்கையை பழனிசாமி வழிமொழிவது வெட்கக்கேடு!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

சென்னை, ஜூன் 19- வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கடலூர் பண்ருட்டி அருகே மூதாட்டி பாலியல் துன்புறுத்தல் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் வழக்கில் விரைவாகக் காவல்துறையினர் குற்றவாளி சுந்தரவேல் என்பவனைச் சுற்றி வளைத்துச் சுட்டுப் பிடித்துள்ள னர். இந்த வழக்கில் வேறு யாருக்கும் தொடர்பு இல்லை; கூட்டு பாலியல் வன்கொடுமை நடக்கவில்லை என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. போலீஸ் விரைந்து செயல்பட்டு குற்றவாளி யைக் கைது செய்துள்ளதைக் கண்டு பொறுக்க முடியாத பழனிசாமி வழக்கம் போல அவதூறு அரசியலைத் தொடங்கியிருக்கிறார்.

பழனிசாமி ஆட்சியில் பெண்களுக்கு எதிராக பாலியல் குற்றங்கள் நிகழ்ந்தால், குற்றவாளி களுக்கு ஆதரவாகச் செயல்பட்டு, பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தையே தாக்கி மிரட்டும் சூழல் நிலவியது தற்போது அது மாறி பெண்களுக்கு எதிராக எவர் குற்றச் செயலில் ஈடுபட்டாலும் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு கைது செய்யப்படுகிறார்கள். அதோடுவழக்குவிசாரணையை விரைந்து முடித்து உச்சபட்சத் தண்டனையும் பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது.

2018 செப்டம்பரில் 60 வயது மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்த 2 இளைஞர்களின் ஜாமீன் மனுவை விசாரித்த நீதிபதி கிருபாகரன், "18 மாத கைக்குழந்தை முதல் 100 வயது மூதாட்டி வரை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர். பாலியல் வன்கொடுமைகளைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?" என பழனிசாமி ஆட்சியை பற்றித்தான் அன்றைக்குக் கேள்வி எழுப்பினார். இதையெல்லாம் மறந்துவிட்டு கூச்சமே இல்லாமல் யோக்கிய சிகாமணி போல பழனிசாமி வேஷம் போடுகிறார்?

பழனிசாமி ஆட்சியின் குற்றச் சம்பவங்கள்!

- 2021 ஜனவரியில் துவரங்குறிச்சி சந்தைப்பேட்டையில் 68 வயதான மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்து கொன்ற கஞ்சாவுக்கு அடிமையான 16 வயது சிறுவன்.
- 2021 பிப்ரவரியில் திருவொற்றியூர் மார்க்கெட் பகுதியில் 80 வயது மூதாட்டிக்குப் பாலியல் வன்கொடுமை.
- 2020 செப்டம்பரில் மதுரை மேலூர் அருகே குடிபோதை யில் 80 வயது மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்த இளைஞர்.
- 2020 அக்டோபரில் திருநெல்வேலி: பணகுடி கோரி காலனியில் 68 வயது மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்த இளைஞர்.
- 2020 டிசம்பரில் பொள்ளாச்சி அருகே உள்ள நம்பியமுத்தூர் பகுதியில் கணவரை இழந்த 75 வயது மூதாட்டிக்கு பாலியல் தொல்லை கொடுத்த இளைஞர்.

இப்படி பழனிசாமி ஆட்சியில் மூதாட்டிகள் கூட பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதைப் பட்டியலிட முடியும்.

தனது ஆட்சியில் நடந்த குற்றச் சம்பவங்களை மறந்துவிட்டு திமுக ஆட்சியில் நடக்கும் குற்றங்களை மட்டுமே பூதாகரமாகப் பேசுவதைப் பார்த்தால் பழனிசாமி மறதி நோய்க்குச் சிகிச்சை பெறுவது நல்லது.

பெண்கள் முன்னேற்றத்திற்கா கப் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி பெண்கள் பாதுகாப்பில் துளியும் சமரசமின்றித் திராவிட மாடல் அரசு செயலாற்றி வருவதால்தான், இன்று இந்தியா விலேயே அதிகமாகப் பெண்கள் வேலைக்குச் செல்லும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. அதோடு இந்தியாவிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலமாகவும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அதன் காரணமாகத் தான் பெண்கள் விரும்பும் ஆட்சியாகவும், பெண்களின் பெரும் ஆதரவு பெற்ற முதலமைச்சராகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இருக்கிறார்.

இதனையெல்லாம் கண்டு பொறுக்காமல் எங்காவது ஏதாவது அசம்பாவிதம் நடந்து விடாதா? அதை வைத்து அரசியல் செய்ய முடியாதா? என நாள்தோறும் அலைகிறார் பழனிசாமி. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டாலும் கூட உள்நோக்கத்தோடு அதை வைத்து அரசியல் செய்கிறார். பழனிசாமியின் இந்த அரசியல் மறைமுகமாகப் பெண்களின் வாழ்வாதாரத்தை அச்சுறுத்துகிறது.

பாலியல் குற்றவாளிகளான அ.தி.மு.க. நிர்வாகிகள்!

பெண்களுக்குப் பயத்தை உண்டாக்கி அவர்களை வீட்டுக்குள்ளேயே முடக்கும் பாஜகவின் கொள்கையை பழனிசாமி வழிமொழிவது வெட்கக்கேடானது.

பழனிசாமியின் ஆட்சி பெண்களுக்கு எதிரான கொடுங்கோல் ஆட்சியாக இருந்ததற்கு பொள்ளாச்சி கூட்டுப் பாலியல் வன்கொடுமையே சாட்சி. பாலியல் குற்றவாளியான அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கு அடைக்கலம் கொடுத்துப் பாதுகாத்த பழனிசாமிக்கு, தற்போது பெண்களின் பாதுகாப்பே முதன்மை என ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் அவர்களைப் பற்றிப் பேச எந்தத் தகுதியுமில்லை.

அ.தி.மு.க. ஆட்சியில் கஞ்சாவும், தடை செய்யப்பட்ட குட்காவும் கடல் போலப் பெருகிக் கிடந்ததை எல்லாம் பழனிசாமி மறந்து விட்டாரா? குட்கா பாஸ்கர் என மக்கள் கூறும் அளவு அமைச்சர்களை வைத்து குட்கா விற்று கல்லா கட்டிய பழனிசாமியா போதைப் பொருட்கள் பற்றிப் பேசுவது? அ.தி.மு.க. ஆட்சியில் மக்களைச் சீரழித்த கஞ்சா, குட்கா போதைப் பொருட்களை எல்லாம் இரும்புக் கரம் கொண்டு அடக்கி அதன் புழக்கத்தைத் தடுத்துள்ள ஆட்சி திராவிட மாடல் ஆட்சி என்பது மக்களுக்குத் தெரியும்.

தனது கூட்டணிக்குள் நடக்கும் குஸ்தியையும், பா.ஜ.க.வின் ஆட்சி அதிகார மிரட்டல்களையும் சமாளிக்க முடியாமல் திணறும் அடிமை பழனிசாமி அதை மடைமாற்ற வீண் அவதூறுகளைக் கொட்டி என்னதான் கலர் கலராய் ரீல் விட்டாலும் அது எதுவும் மக்கள் மத்தியில் எடுபடாது.

தமிழ்நாட்டு மக்கள் முடிவு செய்து விட்டார்கள் 2026 ல் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி 2.0 அமையும், முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதலமைச்சராவது உறுதி. கையில் இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையாவது காப்பாற்றிக் கொள்வீரா? இல்லை அதையும் அமித்ஷா காலடியில் அடமானம் வைத்துவிட்டீரா அடிமை பழனிசாமி அவர்களே!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில், பக்தர்கள் வசதிக்காக இரண்டு மின்கல சிற்றுந்துகள் இயக்கத்தை 15.06.2025 அன்று தொடங்கி வைத்தார்.